கடந்த ஒரு மாதத்தில் த.வெ.க.வினர் செய்த குற்றச் சம்பவங்கள்!

அன்னூர் அருகே பட்டப்பகலில்

வீடுபுகுந்து தவெக பெண் நிர்வாகி, கள்ளக்காதலனுக்கு சரமாரி வெட்டு

மாஜி கணவருக்கு வலைவீச்சு

அன்னூர், ஜூன் 16: அன்னூர் அருகே பட்டப்பகலில் வீடு புகுந்து தவெக பெண் நிர்வாகியையும், அவருடன் தனிமையில் இருந்த கள்ளக்காதலனையும் அரிவாளால் வெட்டிய மாஜி கணவரை போலீசார் தேடி வருகின்றனர்.

கோவை மாவட்டம், அன்னூர் தென்னம்பாளையத்தில் வசிப்பவர் முருகானந்தம். இவரது மனைவி அன்பு மலர் (41). அன்னூர் தவெக நிர்வாகி. இத்தம்பதியர் கடந்து 4 வருடங்களுக்கு முன்பு விவாகரத்து பெற்று தனித்தனியாக பிரிந்தனர். கட்டிட வேலை செய்யும் கும்பகோணத்தை சேர்ந்த மோகன் குமார் (32), அன்பு மலர் குடும்பத்தினருடன் கடந்த ஒன்றரை வருடமாக நண்பராக பழகி

நேற்று மதியம் அன்பு மலரை பார்க்க முருகானந்தம் வந்துள்ளார். அப்போது மோகன் குமார், அன்பு மலர் ஆகிய இருவரும் ஒன்றாக படுக்கையில் அமர்ந்து உணவு சாப்பிட்டிருந்தனர்.

இதை பார்த்து ஆவேசமடைந்த முருகானந்தம் அரிவாளால் அன்பு மலர் மற்றும் மோகன் குமாரை தலை மற்றும் கழுத்து பகுதியில் சரமாரியாக வெட்டிவிட்டு தலைமறைவானார். ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிய இருவரையும் அப்பகுதியினர் மீட்டு அன்னூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக இருவரும் கோவையில் உள்ள மருத்துவமனைக்கு

குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து இளம்பெண் கூட்டு பலாத்காரம்

த.வெ.க. நிர்வாகிகள் 2 பேர் கைது

செங்கல்பட்டு/காஞ்சிபுரம்

காதலிப்பதாக ஆசைவார்த்தை கூறி

3 கல்லூரி மாணவிகளை ஏமாற்றி தவெக நிர்வாகி மகன் உல்லாசம்

- வீடியோ வைரல்
- மாணவியிடம் போலீஸ் விசாரணை

கர்ப்பிணியை பலாத்காரம் செய்ய முயன்ற தவெக பிரமுகர்

தர்ம அடி கொடுத்து போலீசில் ஒப்படைப்பு

திருவண்ணாமலை, ஜூன் 16: திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு பழம்பேட்டை பகுதியை சேர்ந்த கார் டிரைவரின் மனைவி (25) கர்ப்பிணியாக உள்ளார். நேற்றுமுன்தினம் அதிகாலை வீட்டின் அருகே காலை கடன் கழிக்க சென்றாராம். அப்போது அங்கு சென்ற யோகேஸ்வரன் (20) என்பவர் அவரை பலாத்காரம் செய்ய முயன்றாராம்.

தவெக நிகழ்ச்சியில் பங்கேற்ற யோகேஸ்வரன்.

சேத்துப்பட்டு போலீசில் ஒப்படைத்தனர். போலீ

திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில் நிகழ்ச்சி!

வளைகாப்பு என்பது ஏழைப்பெண்களின் ஏக்கம்!

சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை!

திருவண்ணாமலை, ஜூன் 17 -

வளைகாப்பு என்பது ஏழைப்பெண்களின் ஏக்கம் என்று திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில் நடைபெற்ற வளைகாப்பு நிகழ்ச்சியில் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் அவர்கள் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்தும்போது குறிப்பிட்டார்.

16.06.2026 செவ்வாய்கிழமை காலை 9.30மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகித்தார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஓ.பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முன்னதாக மகப்பேறு மருத்துவர் டாக்டர் கவிதா மருத்துவ ஆலோசனைகளை வழங்கி பேசினார்.

விழாவில் கலந்து கொண்டு ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினரும், தூரிகை அமைப்பின் அமைப்பாளருமான வசந்தம் கார்த்திகேயன் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்ப ண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசினார்.

அவர் வாழ்த்தி உரையாற்றும்போது...

தூய்மை அருணை அமைப்பு திருவண்ணாமலை மாநகரில் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் தலைமையில் சிறப்பாக செயல்படுவதைக் கண்டு, எங்கள் பகுதியிலும் மக்கள் பணியில் ஈடுபட தூரிகை என்ற அமைப்பை ஏற்படுத்தி, செயல்பட்டு வருகிறது. இதற்கு காரணம் தூய்மை அருணை.

இங்கே நடைபெறுகிற வளைகாப்பு நிகழ்ச்சியைப்போல எங்கள் பகுதியிலும் 500 கர்ப்பிணி தாய்மார்களுக்கு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

நாங்கள் வருடத்திற்கு நான்குமுறை வளைகாப்பு நிகழ்ச்சி நடத்துகிறோம். ஆனால் தூய்மை அருணை அமைப்பு மாதாமாதம் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்துகிறது. இது ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல, தாய்மையடைந்த ஏழைப் பெண்களின் ஏக்கம். இந்த தொகுதி பெண்களை தனது மகளாக பாவித்து, அண்ணன் எ.வ.வேலு அவர்கள் மாதந்தோறும் இந்த நிகழ்ச்சியை நடத்துகிறார்.

ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தான் பிள்ளை தானாக வளரும் என்பது கிராமத்துப் பழமொழி. இதற்கு பொருள் ஊரில் உள்ள பிள்ளைகளை ஊட்டி வளர்த்தால், நம் பிள்ளை தானாக வளரும் என்று அர்த்தமில்லை. நம் வீட்டிற்கு வந்த மருமகளை நன்றாக கவனித்துக்கொண்டால், அவள் வயிற்றில் வளரும் நம்முடையப் பிள்ளை தானாக வளரும் என்பதுதான் சரியான பொருள்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று செயல்பட்டு வரும் தூய்மை அருணை அமைப்பையும், உயர்தர சிகிச்சை மட்டுமல்லாமல், இலவச சிகிச்சை அளித்திடும் அருணை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

சுகப்பிரசவத்தோடு, ஆரோக்கியமான குழந்தையை பெற்ற வளமான வாழ்க்கையை வாழ்த்திட உங்கள் அனைவரையும் வாழ்த்தி விடைபெறுகிறேன். இவ்வாறு உரையாற்றினார்.

முன்னதாக மாநில தடகள சங்க துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் வசந்த வேலு ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் பிரியா ப.விஜயரங்கன் நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மனிதவள மேம்பாட்டு அலுவலர் இரா.சேஷாத்திரி, இல.கு ணசேகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் எஸ்.பன்னீர்செல்வம், ஒன்றியக்குழுத் தலைவர் இரா ஜவேல், டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், சினம்.பெருமாள், சென்னை.சுரேஷ், இரா.ராஜாமணி, கோபி.சங்கர், வழக்கறிஞர் கிருஷ்ண மூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர 20வது வார்டு பகுதியைச் சேர்ந்த இந்திய கிளினிக் மருத்துவர்கள் சங்க மாநில தலைவர் மருத்துவர் பெனிஸ் ராஜா மற்றும் சரவணன் ஆகியோர் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். தி.மு.க.வில் இணைத்து கொண்டவர்களுக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் முகமது பஷீர், 20 வது வார்டு வட்டச் செயலாளர் பாஸ்கர், கழக மூத்த முன்னோடி அல்போன்ஸ் ஜெரோம், மாமன்ற உறுப்பினர் அமல செல்வன், மாநகர சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் சகாய மைக்கேல் ராஜன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் சங்கீத நாடக அகாடமி – நடிகர்

வாகை சந்திரசேகருக்கு ‘யுவ புரஸ்கர்’ தேசிய விருது!

நாட்டின் உயரிய விருதாகும்!

புதுடெல்லி, ஜூன் 17 -

ஒன்றிய அரசின் சங்கீத நாடக அகாடமி ‘யுவ புரஸ்கர்’ தேசிய விருதினை நடிகர் வாகை சந்திரசேகர் அவர்களுக்கு வழங்கியுள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு:

மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமி “யுவ புரஸ்கர்’ தேசிய விருது நடிகர் வாகை சந்திரசேகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

மத்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சங்கீத நாடக அகாடமி விருது (Sangeet Natak Akademi Puraskar) இந்தியாவின் இசை, நடனம், நாடகம் மற்றும் நாட்டுப்புறக் கலைகளுக்கு வழங்கப்படும் மிக உயரிய தேசிய விருதாகும்

இசை, நடனம், நாடகம், பாரம்பரிய /நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பொம்மலாட்டம் கலைகளுக்கான ஒட்டுமொத்த பங்களிப்பு அல்லது ஆராய்ச்சி என 5 பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன

கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றிய பொருளாளர்

ஜி.வெங்கடாசலம் இல்லத் திருமண விழா!

சி.வி.கணேசன் எம்.எல்.ஏ., நடத்தி வைக்கிறார்!

கடலூர், ஜூன் 17 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் சேப்பாக்கம் கிராமம் நல்லூர் வடக்கு ஒன்றிய பொருளாளர் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஜி.வெங்கடாசலம் - மீனாட்சி ஆகியோரின் மகன் பொறியாளர் வெ.அரிஸ்டாட்டிலுக்கும், கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் வண்ணாத்தூர் கிராமம் துரைசாமி - லட்சுமி ஆகியோரின் மகள் து.அஞ்சலிக்கும் திருமணம் பெரியோர்களால் உறுதி செய்யப்பட்டு இன்று (17.06.2026 புதன்கிழமை) காலை 7:30 மணிக்கு மேல் வேப்பூர் கூட்ரோட்டில் உள்ள மகாலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



திருமணத்தை கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வெ.கணேசன் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றார்.

தேசிய முற்போக்கு திராவிட கழக பொதுச் செயலாளர் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் மணமக்களை வாழ்த்துகின்றார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் நல்லூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பாவாடை கோவிந்தசாமி முன்னிலை வகிக்கிறார்.

நல்லூர் வடக்கு ஒன்றிய பொருளாளர் முன்னாள் கவுன்சிலர் ஜி வெங்கடாசலம் வரவேற்புரை ஆற்றுகிறார்.

திருமணத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக, நகரக் கழக , பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ,மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வெ.சாக்ரடீஸ் நன்றியுரை ஆற்றுகின்றார்.